அருகில் உள்ள கிராமங்களிலிருந்து மக்கள் அனைவரும் வந்து செல்லுகிற ஒரு வியாபார தலமாக கூட அந்தப்பகுதியில் அது இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் இயல்பாகவே சேமிக்கும் பழக்கம் கொண்டவர்கள். மேலும் அப்பகுதியில் காவிரி கரையில் உள்ள விவசாயிகள், பணப்பயிர்களான வாழை, கரும்பு, வெற்றிலை போன்றவைகளை பயிரிடுகிறார்கள். அதில் வரும் பணத்தை சேமிக்கும் வகையில், வருகின்ற காலத்திலாவது மணமேடு கிராமத்தில் திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு அரசு முன்னுரிமை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மணமேடு கிராமத்தில் 3448 மக்கள் தொகை தான் இருக்கிறது என்று நான் சொன்னேன். 10 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே வாதத்திற்காக 10 ஆயிரம் பேர் என்று வைத்துக் கொண்டாலும்கூட அங்கே வைப்புத் தொகைகளை—கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று திறக்கப்படவேண்டும் என்றால் சேர்த்து தரப்படவேண்டும். முதலிலே 30 லட்சமும் அடுத்த ஆண்டு 20 லட்சமும் ஆக 50 லட்சம் ரூபாய், இரண்டாண்டுக் காலத்திலே அங்கே வைப்புத் தொகை ஒன்று தரப்பட வேண்டும். அது மட்டும் அல்லாமல் மணமேடு கிராமத்தில் லட்சுமி வங்கியினுடைய கிளை ஒன்று அங்கேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கிளையே தற்போது எந்த அளவுக்கு தன் காலிலேயே நிற்கும் என்ற அளவிலேகூட ஐயப்பாடு இருக்கிறது. ஆகவே மறு பரிசீலனை செய்தாலும் கூட இப்போது அங்கே ஒரு கிளையை துவக்குவதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தால், அங்கே கிளையை துவக்குவதற்கு எந்தவிதமான உத்தேசமும் அரசுக்கு கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 197, திரு. நா. சா. பழனிசாமி இருக்கையில் இல்லை.

வினா எண் 198, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

198—

சிவகாசிக்கு கூட்டு குடிநீர்த் திட்டம்

* **21056—**திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி புறநகர்ப் பகுதிகளுக்கும், பஞ்சாயத்து எல்லைக் குட்பட்ட பகுதிகளான காலனிகளுக்கும் கூட்டு குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிவகாசி புறநகர் பகுதிகளுக்குக் கூட்டு குடிநீர்த் திட்டம் அமைப்பதற்கு சிவகாசி நகரைச் சுற்றியுள்ள ஆறுகளில் நீர்வளம் இல்லாததால், சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதியாக பல்லப்பட்டி பஞ்சாயத்து, விஸ்வநத்தம் பஞ்சாயத்து, நாரணாபுரம் பஞ்சாயத்து, ஆனையூர் பஞ்சாயத்து மற்றும் செங்கம்மநாச்சிபுரம் பஞ்சாயத்தைச் சேர்ந்த சுமார் 20 காலனிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 50,000 பேர் அங்கே குடியிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக முத்துராமலிங்கம் காலனி, சிவகாந்திநகர், விவேகானந்தா காலனி, நேரு காலனி போன்ற இடங்களில் இன்றைக்கு கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதற்காக ஆனைகுட்டம் அர்ச்சனா நதி திட்டத்தின் கீழாக ஒரு புதிய திட்டம் ஏற்கெனவே வரையறுக்கப்பட்டு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை உடனே நிறைவேற்றி சிவகாசி புற நகர்ப் பகுதிக்கும் மற்றும் பஞ்சாயத்து பகுதிகளுக்கும் புதிய கூட்டு குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற கேள்வி சிவகாசி நகரைச் சுற்றியிருக்கிற ஒட்டுமொத்தமான புற நகர்ப்பகுதிகளுக்கும், பஞ்சாயத்து எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளிலான காலனிகளுக்கும் கூட்டு குடிநீர்த் திட்டத்தை ஒரே திட்டமாகச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற பகுதிகளிலே சில இடங்களிலே பல்வேறு முறையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கையிறைப்பான்களும் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அந்த விஜயலட்சுமி காலனி, பர்மா காலனி, விவேகானந்தா காலனி, சிவகாமிபுரம் காலனி மற்றும் ஷாந்தி நகர், மாட்சிபுரம் காலனி, லிங்கபுரம் காலனி, காமராஜ்புரம் காலனி, உசேன் காலனி ஆகிய பகுதிகளுக்கு இன்றைக்கு தமிழ்நாடு

1995 ஏப்ரல் 3]

குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக ஒரே ஒரு கூட்டு குடிநீர்த் திட்டத்தை அங்கே இருக்கின்ற நீரை ஆதாரமாகத் தோற்றுவித்து திட்டம் செயல்படுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு நடப்பு நிதியாண்டிலேயே 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : தலைவர் அவர்களே, நல்லதொரு பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதே நேரத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிவகாசிக்கு வருகை தந்தபோது 5.08 கோடி ரூபாய்க்கான குடிநீர்த் திட்டத்தை திறந்து வைத்து அதனால் பாலைவனமாக இருந்த சிவகாசியை சோலைவனமாக ஆக்கி நல்லதொரு குடிநீர்த் திடடத்தை தந்திருக்கிறார். அதனால் நகராட்சியினுடைய குழாயைத் திருகினால் குடிநீர் எந்நேரமும் வந்துகொண்டிருக்கிறது. நகராட்சிக்கு அருகில் அடுத்து ஒரு அடி எடுத்து வைத்தவுடனேயே குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. எனவே, நகராட்சிப் பகுதிகளுக்கு இந்த காலனிகளைச் சேர்ந்தவர்கள் சென்று குடிநீர் பிடித்தால், அந்த நகராட்சிப் பகுதியில் உள்ள மக்கள் ஆட்சேபம் தெரிவிக்கிறார்கள். எனவே இந்த நகராட்சி எல்லை முடிவடையும் தருணத்தில் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடங்களில் பப்ளிக் பவுண்டெயின்ஸ்—பொது மக்கள் பிடிக்கும்படியாக, இந்த காலனி மக்கள் பிடிப்பதற்கு ஏதுவாக பப்ளிக் பவுண்டெயின்ஸ்—ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற அந்த சிவகாசி நகருக்கு வழங்கப்படுகிற கூட்டு குடிநீர்த் திட்டம் 1989 ஆம் ஆண்டு போடப்பட்டு சுமார் 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அந்தத் திட்டம் தீட்டப்பட்டது. அது உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்த அளவுக்கு அந்தத் திட்டம் முந்தைய ஆட்சியாளர் காலத்திலே முடக்கப்பட்டு, எந்த அளவுக்கு அங்கே பாதிக்கப்பட்டு குழாய்கள் எல்லாம் மிகவும் மோசமான சூழ்நிலையிலே இருந்தன என்பதும், இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அங்கேயிருக்கின்ற குழாய்கள் எல்லாம் மாற்றப்பட்டு அதிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இன்றைக்கு திட்டம் 2011-ஆம் வருட மக்கள் தொகைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருக்கின்ற அந்தச் செய்தியும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

சுமார் 1 இலட்சம் 30,000 மக்கள் தொகைக்கு மேலான மக்களுக்கு அங்கே போதுமான குடிநீர் கிடைக்க வாய்ப்பை இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி நகராட்சி எல்லைகளுக்கு உட்பட்ட மக்களுக்கு இன்றைக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை பொறுத்தவரை நகராட்சிக்கு உட்பட்டிருக்கின்ற பகுதிகளுக்கு மட்டுமாக இந்தத் திட்டம் தீட்டப்பட்டு இன்றைக்கு இந்தத் திட்டத்தை புறநகர்ப் பகுதிக்கு நீட்டிக்க இயலாத நிலைமை இருக்கிறது. ஆனாலும்கூட இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நகராட்சியினுடைய எல்லைப் பகுதியிலே ஏதாவது ஒரு பொது குழாய் போட்டோம் என்று சொன்னால் அங்கே அருகாமையில் இருக்கின்ற மக்களுக்குப் பயன்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு சாத்தியக்கூறாக இருக்கும் என்பதை ஆய்வு செய்துதான் முடிவு எடுக்க வேண்டும். ஆகவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இதுசம்பந்தமாக குறிப்பு அனுப்பப்பட்டு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *11-15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 199, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

199—

ஆதிதிராவிடர் பெண்கள் விடுதிக்குக் கூடுதல் கட்டிடம்

***36522—திரு. கி. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் ஆதிதிராவிடர் பெண்கள் தங்கும் விடுதிக்குப் போதிய இடம் இன்மையால் கூடுதலாகக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டையில் ஆதிதிராவிடர் பெண்கள் தங்கும் விடுதிக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்களிடமிருந்து மதிப்பீடுகள் பெற்று மேற்படி கட்டிடம் கட்ட அரசு பரிசீலனை செய்யும்.